பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 147

செவ்வாய்க்கிழமை
22 ஏப்ரல் 2025

சித்திரை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**ஈஸ்டர் தாக்குதல்களில் இறந்தோருக்கு அஞ்சலி!**

விரிவு பக்:-02

# யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் விரைவில் காணிகள் விடுவிப்பு

## ஓரிரு தினங்களில் அறிவிப்பு

**யாழ்ப்பாணம் ஏப்ரல். 22**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பெருமளவான காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்றும், அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் தெரியவருகின்றது.**

11

## இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் ஸஹ்ரானுக்கு என்ன தொடர்பு?

### முழுமையான விசாரணை தேவை கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22
உயிர்த்தஞாயிறுத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதக் குழுவின் தலைவரான ஸஹ்ரானுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.
கொழும்பு கொச்சிக்கடை

11

## எரிவாயு கசிந்து தீவிபத்து; குடும்பப்பெண் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப். 22
எரிவாயுக் கசிவால் ஏற்பட்ட தீவிபத்தில் குடும்பப்பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.
கிளிநொச்சி மருதநகர் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
நேற்றுமுன்தினம் மாலை சமையல் செய்துகொண்டிருந்தபோது, எரிவாயுக் கசிவு ஏற்பட்டு அவருடைய ஆடையில் தீ

11

## பாப்பரசர் பிரான்ஸிஸ் நேற்றுக் காலமானார்!

### கத்தோலிக்கத் திருச்சபையை சீர்திருத்தத்துக்கு உட்படுத்தியவர்



உரோம், ஏப். 22
கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்ஸிஸ் (வயது 88) நேற்றுக் காலை காலமானார்.
மார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் நுரையீரலில் ஏற்பட்ட

11

## வேட்புமனுக்கள் நிராகரிப்பு; மேன்முறையீடுகள் தள்ளுபடி

கொழும்பு, ஏப். 22
உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வடக்கில் உள்ள அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உள்ளடங்கலாக பல தரப்பாலும் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்

11

### குற்றப்புலனாய்வுப் பிரிவால்

## மைத்திரிக்கு எதிராக நேற்றும் விசாரணை!



கொழும்பு, ஏப். 22
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று

11

### யாழ்ப்பாணத்தில்

## கடவுச்சீட்டு அலுலகம் துரிதகதியில் பணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 22
இன்னும் ஓரிரு வாரங்களில் இயக்குநிலையை அடையக்கூடிய வகையில், யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்று

11

### யாழ். போதனா மருத்துவமனையின்

## நுழைவாயிலருகே கஞ்சா வியாபாரம்

### துப்புரவுத் தொழிலாளி சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வாயிற் பகுதியில் வைத்து, கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் அரசபுலனாய்

11

## தலதாமாளிகை மீதான தாக்குதல்: மன்னிப்புக்கோரவேண்டும் ஜே.வி.பி.

### ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 22
தலதாமாளிகைமீது தாக்குதல் நடத்தியதற்காக ஜே.வி.பி.யினர் மன்னிப்புக் கோரவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

12

### எழுதுமட்டுவாழ், ஆனையிறவில்

## சோதனைச் சாவடிகள் மீண்டும் அகற்றம்!

கிளிநொச்சி, ஏப். 22
யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் மற்றும் ஆனையிறவுப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மீண்டும் அகற்றப்பட்டுள்ளன.
ஜனாதிபதி

11

## மூளைக்காய்ச்சலால் யுவதி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22
மூளைக்காய்ச்சல் காரணமாக யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.
தெல்லிப்பழை -

11

### மூச்சந்தி முராளி



**‘கம்பஸில நடந்தால் கூட இவையளுக்கு அதுதான் கண்ணுக்க குத்தும் கண்டியளோ’**

### அமெரிக்க வரிகள் தொடர்பில்

## வொஷிங்டனில் பேச்சுவார்த்தை

கொழும்பு, ஏப். 22
இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டுள்ள வரிகள் தொடர்பில், இலங்கையின் விசேட குழு வொஷிங்டனில் இன்று பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளது.

11

### நடைபவனி நேரத்தில்

## பொலிஸார் குவிக்கப்பட்டதால் யாழ். பல்கலையில் பதற்றம்!



யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்ட நடைபவனியின்போது பொலிஸார் குவிக்கப்பட்டதால், அந்தப் பகுதியில்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4050
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 03 32 56 71
விசேட எழுத்து: N

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1117
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 03 12 21 25

**NLB ஜய**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0076
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 1 2 2 0

**மெகா பவர்**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2156
ஆங்கில எழுத்து: V
சுப்பர் இலக்கம்: 13
வெற்றி இலக்கங்கள்: 07 16 22 70

**மஹஜன சம்பத**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5808
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 7 6 5 6 9 3

**தன நிதானய**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1838
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 37 54 66 71
விசேட எழுத்து: E

**அத சம்பத**
திகதி: 21.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0383
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 5 6 9 3

### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக

# சுயாதீன வழக்கு விசாரணை அலுவலகம் உருவாக்கப்படவேண்டியது அவசியம்!

**கொழும்பு, ஏப்.22**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சுயாதீன வழக்கு விசாரணை அலுவலகம் அவசியம் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

ஆறு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகம் அவசியம்.


கொலைசெய்யும் கூலிப்படைகள் இல்லாத, வெள்ளை வாகனங்கள் இல்லாத, சட்டவிரோதத் தடுப்பு முகாம்கள் இல்லாத புதிய சமூகமொன்றை அரசாங்கம் உருவாக்கவேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு அன்று நிலவிய அரசியல் கலாசாரமே காரணம்-என்றார். (எ-இ)

## இளநீருக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. போதியளவு செவ்விளநீர் குடாநாட்டுக்கு வராததால் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவுகிறது. தற்போது நிலவும் கடும் வரட்சி, வெப்பத்தால் அதிகமான மக்கள் செவ்விளநீர் பருகுகின்றனர். ஒரு செவ்விளநீர் 200 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் தெரிவித்தனர். (எ-25-17)



## ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோருக்கு மரியன்னை பேராலயத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்.22

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில், குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரார்த்தனை கள் நிகழ்த்தப்பட்டன. தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் பொதுச்சுடர், மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டது. நிகழ்வில் ஏனைய தேவாலயப் பங்குத்தந்தைகள், அருட்தந்தையர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-125,20)

**சுபிரி தன சம்பத**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 0516
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 2 4 6 0 0 4

**Super Ball**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2782
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 37 50 65 80

**சனிதா**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கம்: 10 13 61 79
வெற்றி வாரம்: 4943

**லக்ன ராசி**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம்: 13 20 24 46
சீட்டிழுப்பு வாரம்: 4494

**KAPRUKA**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 10
வெற்றி இலக்கம்: 08 21 36 65
வெற்றி வாரம்: 1958

**அத கோடிபதி**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கம்: 33 42 55 61
வெற்றி வாரம்: 2608

**JAYODA**
திகதி: 21.04.2025
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கம்: 30 52 53 60
வெற்றி வாரம்: 2120





### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்

## சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை

*ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்து*

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேணடும் என்று ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்தியுள்ளார். அரசியற் தேவைகளுக்காக ஆட்சிகளை உருவாக்குவதற்காக சிலரால் முஸ்லிம் இளைஞர்கள் திசைதிருப்பப்பட்டு மிக மோசமான செயல் செய்யப்பட்டுள்ளது. தற்போதுதான் சில உண்மைகள் வெளிவருகின்றன. யார் பின்னணியில் இருந்தார்கள், யார் இதைத் செய்தார்கள் போன்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதோடு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.22

இலங்கை இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தலும், நினைவுப்பேருரை நிகழ்வும் நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாமனிதர் சிவநேசனின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, தமிழ்த்தேசியக் கட்சியின் [illegible] செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் க.சுகாஷ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நினைவுப் பேருரை ஆற்றினார்.

இறுதியாக மாமனிதர் சிவநேசனின் மகன் திருக்குமார் ஏற்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ்த்தேசியப் பேரவையின் உள்ளூராட்சிசபை வேட்பாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா, பிள்ளையானுக்கு பதவி வழங்கியமை தவறு!

## மைத்திரிக்கு வந்த ஞானம்

**கொழும்பு, ஏப்.22**

**புலிகள் அமைப்பில் இருந்தபோது குற்றம் இழைத்த கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறான முடிவாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் பிள்ளையானை தொடர்புபடுத்துவதற்கு முற்படுகின்றனர் என வெளியாகும் தகவல் தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது- அது பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி.யினர் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கே அது பற்றித் தெரிந்திருக்கக்கூடும். பிள்ளையான் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்தபோது நான் அமைச்சுப் பதவி வழங்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவருக்கு எப்படி பதவி வழங்கப்பட்டது என வழங்கியவரிடம் கேளுங்கள். புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி கருணாவும், பிள்ளையானும் இராணுவத்துடன் இணைந்தது போரை முடிப்பதற்கு உதவியாக அமைந்திருக்கக்கூடும். அம்பாறையில் பிக்குகளை கொலைசெய்தது யார்? இது அனைவருக்கும் தெரியும். புலிகள் அமைப்பில் இருந்தபோது கருணா, பிள்ளையான் மக்களைக் கொன்று குற்றம் இழைத்தனர்-என்றார். (எ-44)

# சட்டத் துரும்பைப் பயன்படுத்தி அரசின் திட்டம் முறியடிப்பாம்!

— கம்மன்பில சுயதம்பட்டம் —

கொழும்பு, ஏப்.22

பிள்ளையானைக் கைதுசெய்து, அவர் வழங்கிய வாக்குமூலம் என்ற அடிப்படையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரியொருவரை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், பிள்ளையானின் சட்டத்தரணியுமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்புக்கூறவேண்டிய நபர்கள் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னதாக பகிரங்கப்படுத்தப்படுவார்கள் என ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் அப்படியொரு வெளிப்படுத்தல் ஜனாதிபதியால் செய்யப்படவில்லை. பிள்ளையானைக் கைதுசெய்து, அவர் வழங்கிய வாக்குமூலம் என்ற அடிப்படையில் தமது மனதில் உள்ள பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்தவே அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. அதனால்தான் சட்டத் துரும்பை பயன்படுத்தி பிள்ளையானை, சந்தித்து அரசாங்கத்தின் திட்டத்தை முறியடித்தோம். பிரதான சூத்திரதாரியை உருவாக்கும் முயற்சியை இல்லாது செய்யமுடிந்தது. சஹ்ரான் தான் பிரதான சூத்திரதாரியென அமெரிக்காவின் எவ்.பி.ஐ. கூட கூறியுள்ளது-என்றார். (எ-44)

ஸ்ரீ.ல.ம.ம
இ.போ.ச S.L.T.B

# வேண்டுமென்று சீர்குலைக்கப்பட்ட போக்குவரத்துச் சபை


கொழும்பு, ஏப்.22

இலங்கைப்போக்குவரத்துச் சபை வேண்டுமென்றே சீர்குலைக்கப்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சிக்கு அரசியல்வாதிகளும், சில அதிகாரிகளுமே பொறுப்பேற்கவேண்டும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். போக்குவரத்துச் சபையை மீண்டும் கட்டியெழுப்பத்தயாராக இருக்கின்றோம். இலங்கைப்போக்குவரத்துச் சபையை மீண்டும் உயிர்ப்பிப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சட்டவிரோத மீன்பிடித்தொழிலை கட்டுப்படுத்தக்கோரி போராட்டம்

முல்லைத்தீவு, ஏப்.22

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. சட்டவிரோத தொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்திய மீனவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் அண்மையில் தீக்கிரையாக்கப்பட்டது என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (எ-இ)



மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில்

# வாக்குறுதிகளை கைவிட்டதால் ஓரங்கட்டப்பட்டது இலங்கை!

கொழும்பு, ஏப்.22

ஐ.நா.வுக்கும், இந்தியாவுக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததாலேயே மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது போர் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஐ.நா. செயலாளர் இலங்கைக்கு வந்தார். 13 பிளஸ் வழங்கப்படும் என அவரிடம் உறுதியளிக்கப்பட்டது. இந்தியாவிடமும் இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டது. எனினும், அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. அதேபோல 13 பிளஸ் வழங்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு உறுதியளிக்கப்பட்டது. அது நிறைவேற்றப்படவில்லை.

இப்படியான செயல்களாலும், ஊழல் மோசடிகளாலும் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டது-என்றார். (எ-44)




எங்கட ஆக்களின்ர கையில வெளிச்சத்துக்காக தீப்பெட்டியைக் குடுத்தால், அதைக் கொண்டுபோய் ஊர் முழுக்க நெருப்பு வைக்கிற வேலையைத்தான் பாப்பினம். கையில அதிகாரம் இருக்கெண்டதுக்காக அரசாங்கம்கூட கண்ணைமூடிக்கொண்டு நினைச்சதெல்லாம் செய்யேலாது. அரசாங்கமே அடக்கி வாசிக்கேக்க அம்புலன்ஸ்காரர் மட்டும் ஆணவத்தில ஆடுகினமெண்டு சனங்கள் குறைப்படுகினம்.

வழக்கமாவே பருத்தித்துறையில இருந்து யாழ்ப்பாணம் வரைக்குமான றோட்டில வாகனங்கள் அறம்புறமா ஓடித்திரியிறதைக் கண்டிருப்பியள். அது பத்தாதெண்டு, மினிபஸ்காரரும், சீ.ரி.பி. காரரும் ஒருத்தரை ஒருத்தர் துரத்துப்படுறதும், கொழுவுப்படுறதும் அந்த றோட்டில அடிக்கடி நடக்கும். உந்தப் பயத்தில எப்பவும் உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டுதான் சனங்கள் அந்த றோட்டால போய்வாறவை. இப்பிடி மின்னல்வேகத்தில வாகனங்களை ஓடி, அக்சிடெண்ட் படக்கூடாது எண்டதுக்காக கோப்பாய்ச்சந்தியில சிக்னல் பூட்டியிருக்கு. சந்தியின்ர நாலுபக்கத்தாலையும் வாறவை அதில ஒரு நிமிசம் நிண்டுதான் வரவேணும். ஆனால் எங்கடையாக்கள் சிலர் கிணத்துக்கட்டில குழந்தையைக் கிடத்திப்போட்டு வந்தமாதிரி பச்சை லைற் விழமுதலே றோட்டைக் கடந்திடுவினம். அதில சிக்னல் போட்டபிறகும் அதை மதிக்காமல் சில வாகனங்கள் போய்வாறதால அந்தச் சந்தியில இப்பவும் அடிக்கடி அக்சிடெண்ட் நடக்கிறது. அதில அடிக்கடி பொலிஸ்காரர் வந்துநிண்டால், அந்தப் பயத்திலயாவது இப்பிடி சிக்னலை மதிக்காமல் போறதை நிப்பாட்டிப்போடுவினம். எண்டாலும் பொலிஸ்காரருக்கு கோப்பாய்ச்சந்தியில என்ன கோபமோ தெரியேலை, அங்க நிக்கிறதே இல்லை. அக்சிடெண்ட் நடந்த பிறகுதான் வருவினம்.

இப்பிடிச் சிவப்புச் சிக்னல் விழுந்திருக்கேக்க அம்புலன்க்ஸ்"கள் மட்டும்தான் பச்சை சிக்னல் வருமட்டும் நிக்காமல் போகலாம். ஏனெண்டால் ஆஸ்பத்திரியளில அவசர வருத்தக்காரரைத்தான் அம்புலன்ஸில அனுப்புவினம். அவையை வேளைக்குக் கொண்டுபோய் பெரியாஸ்பத்திரியில சேர்க்கோணும் எண்ட அவசரத்தில வாற அம்புலன்ஸ் ஒரு செக்கன்கூட வீணாக்கக்கூடாது எண்டதாலதான் அதுக்கு மட்டும் சிக்னலில இருந்து விதிவிலக்குக் குடுத்திருக்கு. ஆனால் அதைச் சிலர் பிழையாப் பாவிக்கினமாம். முந்தநாள் காலமை ஒரு பத்தரை மணிக்கு வடமராட்சிப் பக்கத்தில இருந்து ஒரு அம்புலன்ஸ் மின்னிக்கொண்டு யாழ்ப்பாணப் பக்கமாக வந்தது. அந்த அம்புலன்ஸ் கோப்பாய்ச் சந்தியில நிக்கத் தேவையில்லைதான். ஆனால் கோப்பாய்ச் சந்தியில சிக்னல் இருக்கெண்டதும், பச்சை லைற் விழுந்த பக்கம் நிண்ட சனங்கள் சிவப்பு லைற் விழுகிறதுக்குள்ள றோட்டை அவசரமாக் கடப்பினம் எண்டதும் அம்புலன்ஸ்காரருக்கு தெரியும்தானே. அப்ப அவை என்ன செய்யோணும்? கொஞ்சம் வேகத்தைக் குறைச்சு, ஆக்களைப் பார்த்துத்தானே அம்புலன்ஸை அந்த இடத்தில ஓடோணும். ஆனால் அந்த அம்புலன்ஸ் உதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் அதேவேகத்தோட கோப்பாச் சந்தியைக் கடந்தது. அந்த நேரம் நடுச்சந்தியில குழந்தைப் பிள்ளையளோட வந்தவையும், வயசு போனவையும், சின்னப் பிள்ளையளும் றோட்டைக் கடந்துகொண்டு நிண்டவை. இந்த அம்புலன்ஸ் இப்பிடி வேகத்தைக் குறைக்காமல் வருமெண்டு அவையள் ஆரும் எதிர்பாக்கேலை. கொஞ்சமெண்டால் நாலைஞ்சு பேரை அந்த அம்புலன்ஸ் அடிச்சிருக்கும். நல்லவேளையா, றோட்டில வந்தவை அங்கால இஞ்சால ஓடினதால மயிரிழையில தப்பிட்டினம். இல்லாட்டி அதில நாலஞ்சு பேரை அம்புலன்ஸ் அடிச்சிருக்கும். அப்பிடி அடிச்சபிறகு அழுது என்ன பிரியோசனம்? அம்புலன்ஸ் எண்டால் ரூல்ஸை மதிக்கத் தேவையில்லை எண்டு ஆரோ அதை ஓடினவருக்கு பிழையாச் சொல்லிக்குடுத்திட்டினம் போல. இனியாவது, உயிரோட இப்பிடி விளையாடுறதை விட்டிட்டு றோட்டில போய்வாற ஆக்களையும், சிக்னலையும் மதிச்சு அம்புலன்ஸ்காரர் ஓடினால் ஏதும் குறைஞ்சோபோடும்?

padsi@uthayan.com — பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத் அபார வெற்றி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், 39 ஓட்டங்களால் அபாரமான வெற்றியைப் பதிவுசெய்தது குஜராத்.**



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி, அணித் தலைவர் கில்லின் அபாரமான ஆட்டத்தால் 3 விக்கெட்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கில் 90 ஓட்டங்களைப் பெற்றார். சாய் சுதர்சன் 52 ஓட்டங்களையும், பட்லர் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணியின் இன்னிங்ஸில் அதிரடி என்பது இருக்கவேயில்லை. ஆரம்பம் முதல் குஜராத் அணி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது. திறமையான பந்துவீச்சால் கொல்கத்தா அணி கட்டுப்படுத்தப்பட முடிவில் 8 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே அந்த அணியால் பெறமுடிந்தது. 39 ஓட்டங்களால் குஜராத் வெற்றிபெற்றது.

(ம)

## ஐயர் தேவை

யாழ் நகரப்பகுதியில் உள்ள ஒரு கோயிலுக்கு மூன்று வேளை பூசை செய்வதற்கு ஐயர் ஒருவர் தேவைப்படுகிறார்.
தங்குவதற்கு வீடு வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
**076 012 5636**

## கேள்வி அறிவித்தல் தொடர்பானது

18.04.2025ம் திகதிய உதயன் பத்திரிகை பக்கம் 08 ல் பிரசுரமான எமது கேள்வி அறிவித்தல் பந்தி 08 மற்றும் அட்டவணை என்பவற்றில் குறிப்பிடப்பட்ட கேள்வி சமர்ப்பிக்கவேண்டிய நேரம் எதிர்வரும் 2025.05.08ம் திகதி வியாழக்கிழமை மு.ப10.00 மணி வரை என மாற்றப்பட்டுள்ளது என்பதுடன் கேள்விநேரம் முடிவடைந்தவுடன் கேள்வி திறக்கப்படும். அனைத்து வேலைகளுக்குமான கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் 2025.08.20வரை என மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் அட்டவணையில் தொடர் இலக்கம் 01 இல் காரைமுனாங்கில் திண்மக்கழிவு தரம்பிரிக்கும் கொட்டகை அமைத்தல் வேலைக்கான அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை 18.07 எனவும் அதற்கான கேள்விப் பிணைவைப்புத் தொகை 271,000.00 எனவும் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்,
பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேச சபை,
0212222700

2025.04.22

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1963



மறைவு 16 . 04 . 2025

### சபாரத்தினம் பிரபாகரன்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பிரபாகரன் (பிரபா) கடந்த 16.04.2025 புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - பரஞ்சோதி தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சத்தியதேவியின் அன்பு பெறா மகனும், மிருதுளா காலஞ்சென்ற ஸ்ரீகரன் மற்றும் பிரேமிளா, சியாமளா, வத்சலா, நிரஞ்ஜலா ஆகியோரின் அருமைச் சகோதரனும், இராகவன், சின்னத்துரை, சுதர்சனன், செல்வகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷோர், பிரதீஷ், சின்ஷியா, ருக்மாங்கன், காஞ்சனா ஆகியோரின் ஆசை மாமாவும், எமிலியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (24.04.2025) வியாழக்கிழமை பிரான்ஸ் நேரப்படி முற்பகல் 09.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை Crematorium du pere locherise எனும் மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்படும். பிற்பகல் 12.30 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

186/2, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

(CS30070) J-11

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1934



மறைவு 21 . 04 . 2025

### இரத்தினம் நல்லநாயகி

நாரந்தனை வடக்கினைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கலாசாலை வீதி என்பவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் நல்லநாயகி நேற்று (21.04.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா இரத்தினம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரநாதபிள்ளை மற்றும் கனகமணி, தியாகராசா, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் இந்திராதேவி, தீனதயாளன் ஆகியோரின் சகோதரியும், மனோரஞ்சிதம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தேவராணி, காலஞ்சென்ற பேரின்பநாயகி மற்றும் ராணி ஆகியோரின் மைத்துனியும், குமரன், றொஷானி, ஜனனி ஆகியோரின் மாமியாரும், சிவசங்கரி, சாரங்கன், ஜாறா, ஞானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(CS 30069) (K-1)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காத்திருப்பின் வலி!

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுக்கு நீதி கிடைக்கும் என்று உறுதியுடன் நம்புவதாகத் தெரிவித்திருக்கின்றது கத்தோலிக்கத் திருச்சபை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், வெளிநாட்டவர்கள் என 260க்கும் மேற்பட்டவர்களின் ஆறாவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நாடெங்கும் நேற்றுக் காலை கடைப்பிடிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே, தாக்குதல்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்டிருக்கின்றார் கத்தோலிக்கத் திருச்சபையின் இலங்கைக்கான தொடர்பாடல் குழுவின் முக்கியஸ்தர் அருட்தந்தை சிறில் காமினி.

இலங்கையில் மதத்தலங்களை மையமாகக் கொண்ட பதற்றங்களுக்கும் பரபரப்புகளுக்கும் பஞ்சமே இல்லை. இந்த நாட்டின் நீண்ட குருதிச் சகதியிலும், சாபக்கேடான வரலாற்றின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மதங்களும், மதத்தலைவர்களும், மதத்தலங்களும் இரண்டறக்கலந்த விடயங்களாகவே காணப்படுகின்றன. ஆனால், உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின்போதும், அதற்குப் பின்னரும் இந்த விடயத்தை கத்தோலிக்கத் திருச்சபை கையாளுகின்ற பாங்கு மிகவும் கனதியானது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், ஒரு குறிப் பிட்ட மதத்துக்கு எதிராகவும், அந்த மதத்தைப் பின்பற்றும் இனக்குழுமத்துக்கு எதிராகவும் கலவரங்கள் வெடிக்கக்கூடச் சாத்தியங்கள் இருந்தன. ஆனால், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை , நேரம் அறிந்து வெளிப்படுத்திய கருத்துகள் காரணமாக அவ்வாறான ஆபத்தான நிலையை இந்தத் தீவு எதிர்கொள்வது தவிர்க்கப் பட்டிருந்தது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், கடந்த ஆறு வருடங்களாக நீதிதேடும் பயணத்தை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், அவர் தலைமையிலான அணியினரும் தொடர் கின்றபோதிலும், அவர்கள் ஓர் இடத்திலேனும் எந்தப் பிறழ்வான கருத்தையும் - நிலைப்பாட்டை யும் பதிவுசெய்யவில்லை. இதற்காக அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது தகும். தற்போது அருட்தந்தை சிறில் காமினி வெளியிட்டுள்ள கருத்துகள்கூட அதேவகையின தான். 'ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்குள் தீர்வு வழங்கப்படா விட்டால், பொதுமக்களுடன் வீதிக்கு இறங்கு வோம்' என்று அறிவித்திருந்த கர்தினால் தரப்பினர், தற்போது, நீதியின்பால் வெளியிட்டிருக்கும் நம்பிக்கை, அவர்கள் மீண்டும் ஒருமுறை நம்பவைக் கப்பட்டுள்ளனர் என்பதையே காட்டுகின்றது.

விமர்சனங்களுக்கு அப்பால், இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்களை விடவும், அநுர அரசாங்கம் ஏதோவொரு விடயத்தை புதிதாகச் செய்ய முற்படுகின்றது அல்லது நீதியின் கதவுகளை நெருக்கிக்கொண்டிருக்கின்றது என்பதை உணர முடிகின்றது. அந்த உணர்வொன்றிப்பு கத்தோலிக்கத் தலைமைகளுக்கும் நிச்சயம் ஏற்பட்டிருக்கும். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் வெளியிட்டமைக்குக் காரணமும் அதுவாகவே இருக்கும். எனவே, காத்திருப்பின் வலியையும், அதன் கனதித்தன்மையையும் அநுர அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். கொல்லப்பட்டவர்களுக்கும், அங்கவீனமடைந்த அப்பாவிகளுக்கும் அரசாங்கம் நீதித்தேவதையின் கரங்களால் மருந்திட வேண்டும். ஏனெனில், காத்திருப்பின் வலி கொடியது. அதிலும் நீதிக்காகக் காத்திருப்பதென்பது உச்ச ரணமே!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

இந்த உலகில் வெற்றிபெறுவதற்கான சிறந்த வழி, மற்றவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகளின்படி நீங்களே செயற்படுவதுதான்.

– நெப்போலியன் ஹில் –



## பயங்கரவாதத் தடைச்சட்டம் திரிசங்கு நிலைமையில் அரசு

கொழும்பு, ஏப்.22

பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்துச்செய்யப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்படும்வரையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு தடைவிதிப்பது தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் கரிசனைக்கு, இலங்கை அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்தில் உள்ள சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது, ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக வசதியைப்பெற இலங்கைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வது ஒரு முன்நிபந்தனையாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள், இலங்கை அரசாங்கத்துடனான அண்மைய சந்திப்புகளில், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாகவும் விசாரித்துள்ளனர்.

முன்னைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவைத் தயாரித்திருந்தாலும், இந்தச் சட்டம் சர்வதேசத் தரத்தில் இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டிருந்தது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக வசதியை நீடிக்கவேண்டுமானால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்ய வேண்டிய கட்டாயத்தில் இலங்கை உள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குத் தடைவிதிப்பது தொடர்பாக அரசாங்கம் இன்னமும் விவாதிக்கவில்லை என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் விரைவில் இரத்துச்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஏப்.22

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 2 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது கடந்த வாரம் உத்தியோகபூர்வ கையிருப்புத்தொகை மாற்றமின்றி பேணப்பட்டது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இருப்பினும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வசமுள்ள பிணைமுறி பத்திரங்களின் பெறுமதி முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது இந்த வாரம் 2 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-இ)

## தேர்தல் முறைப்பாடுகள் 224

கொழும்பு, ஏப்.22

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் தொடர்பில் கடந்த மாதம் 3ஆம் திகதி முதல் நேற்றுவரை 224 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 174 முறைப்பாடுகளும், தேர்தலுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் 50 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## புதிய நிறம் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.22

மனிதர்கள் இதுவரை கண்டிராத ஒரு புதிய நிறம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது. இந்த நிறத்துக்கு ஓலோ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த நிறம் கலிபோர்னியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு நடத்திய ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேரடி விழித்திரைத் தூண்டுதல் மூலம் மட்டுமே அதை உணரமுடியும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ-25-இ)

## அமைச்சர் பங்களாக்களில் பெறுமதியானவை மாயம்!

சில அமைச்சர் பங்களாக்களில் பெறுமதிமிக்க பகுதிகள் அகற்றப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல அமைச்சர் பங்களாக்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் பாழடைந்த நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு நகரில் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் ஐம்பது பங்களாக்கள் உள்ளன. அவற்றை பொருளாதார ரீதியாக உற்பத்திசெய்யும் திட்டங்களுக்குப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு பழுதுபார்க்கவேண்டியிருக்கும் என்றும், அதற்கான நிதியைத் திரட்டுவது சிக்கலுக்குரியது என்றும் அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

நாளை

புதன்கிழமை -சித்திரை 10

23.04.2025

சுப நேரம் : 10.31 - 12.01

ராகுகாலம் : 03.01 - 04.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கல்வி நிலையை மீட்டெடுக்க நடவடிக்கை



## பரப்புரைக் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**வவுனியா, ஏப்.22**

**வடக்கு மாகாணத்தில் தற்போது கல்வி பாதிக்கப்பட்டுக் கீழ்நிலையில் உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை என்பன நாடு முழுவதும் இருந்தாலும் வடக்கில் கூடுதலாக உள்ளது. அவற்றை நிவர்த்திசெய்யவேண்டியுள்ளதுடன், புதிய கல்விச் சீர்திருத்தம் ஒன்றும் உருவாக்கப்படவேண்டும்-இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் பொருளாதாரத்தை கிராம மட்டத்தில் இருந்து அபிவிருத்தி செய்யவேண்டும். நாட்டையும் அபிவிருத்தி செய்யவேண்டும். எங்கள் பிள்ளைகளின் கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டும். வவுனியாவின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்யவேண்டும். எதிர்காலத்தில் உல்லாசப்பயணிகளை இங்கு வரவழைக்கக்கூடிய முறைமையை நாம் உருவாக்குவோம்.

அரசாங்கத்துக்குப் பொருத்தமான எங்களுடன் இணைந்து செயற்படக் கூடிய சபைகளை மக்கள் உருவாக்கவேண்டும். அதன்மூலமே கிராமங்களுக்கு விரைவான அபிவிருத்தியைக் கொண்டுவரமுடியும். ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை வடக்கில் கூடுதலாக உள்ளது. எதிர்வரும் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றோம். ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (எ-110)

# கிராமிய அபிவிருத்தி நிதியில் 25வீதமே இதுவரை பயன்பாடு

இந்தநிலையை மாற்றவேண்டும் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஏப்.22

கடந்தகாலங்களில் கிராமிய அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 25 வீதம் மட்டுமே அபிவிருத்திக்குச் செலவிடப்பட்டது. மிகுதி 75 வீதமும் தனிநபர்களின் பொக்கற்றுகளுக்குள் சென்றுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நட்டாங்கண்டலில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வரவுசெலவுத் திட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்குக் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் பயன்படுத்துவதற்குத் திறமையான ஓர் அணி தேவை. எமது அணி அதற்குப் பொருத்தமானது என்று நம்புகின்றோம். இந்தப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் மட்டும் அழிக்கப்படவில்லை, பல உயிர்களும் காவுகொள்ளப்பட்டுள்ளன. இங்குள்ள பல தாய்மாரும், மனைவிகளும் உங்கள் பிள்ளைகளுக்கும், கணவர்களுக்கும் என்ன நடந்தது என்று உங்கள் அன்புக்குரியவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினைக்கு எமது ஆட்சியில் தீர்வுகாண்பதுடன், இன்னொரு தடவை அவ்வாறு நிகழாதவாறு பார்த்துக்கொள்வோம். எமக்கு வாக்களித்த மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவோம்-என்றார். (எ-6)



# தேசிய மக்கள் சக்தி வென்றால் ஆக்கிரமிப்புகள் சட்டரீதியாகும்

சுரேன் குருசாமி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22



தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி சபை அதிகாரங்கள் செல்லுமாயின் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அனைத்து ஆக்கிரமிப்புகளும் சட்டரீதியாக மாற்றப்படும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது கூட்டமைப்பின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை திட்டமிட்ட ஒரு செயற்பாடு. ஜனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்துக்கு மக்கள் வழங்கிய பேராதரவை உள்ளூராட்சித் தேர்தலிலும் வழங்குவார்கள். உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் தேசிய மக்கள் சக்தியிடம் செல்லுமாயின் சட்டவிரோத தையிட்டி விகாரை அமைக்கப்பட்டது சரி என்று பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றுவார்கள்.

தமிழ் மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்-என்றார். (எ-25,20)

# சாமர சம்பத்தின் மறியல் நீடிப்பு



கொழும்பு, ஏப்.22

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் விளக்கமறியல் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க நேற்றுக் காலை பதுளை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க பதவி வகித்தபோது, பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாகப் பெற்று அந்தப் பணத்தைத் தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகளில் சாமர சம்பத் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோது

# நல்லாட்சியில் பதவி வகித்தோர் இப்போதும் உயர் பதவிகளில்

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடைபெற்றபோது நல்லாட்சி அரசாங்கத்தின் உயர் பதவியில் இருந்தவர்களே தற்போதைய அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளை வகிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச. அநுராதபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ராஜபக்சவினரை ஜனாதிபதி பேசித்திரிவதால், ட்ரம்ப் வரியை அகற்றப்போவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹர்ஷடி சில்வா மற்றும் டீ.வீ.ஷானக்க ஆகியோர் ஆலோசனை அடங்கிய வேலைத்திட்டம் ஒன்றை வழங்கியுள்ளனர். அதையாவது எடுத்துக்கொண்டு ஒரு வேலைத்திட்டத்தைச் செய்யவேண்டும். கடிதம் ஒன்றைத் தபால்மூலம் அனுப்பிவிட்டுப் பதில் வரும் என்று பார்த்துக்கொண்டிருந்தால் நாடு சவால்களைச் சந்திக்க நேரிடும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்றமுடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எமது கட்சி நாட்டுக்கு வேலைசெய்த கட்சி ஆகையால் இந்த நாட்டு மக்கள் எமக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு-என்றார். (எ-இ)

# தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஏப்.22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கரைத்துறைபற்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர்களுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேசக் கிளைக்குட்பட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நேற்று நடத்தினார்.
கலந்துரையாடலில் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பேசப்பட்டதுடன், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படும் ஐந்து உள்ளூர் அதிகாரசபை வட்டாரங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆலோசனைகளும் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. (ச-33)



### வல்வெட்டித்துறை நகராட்சியின்

# தமிழ்த்தேசியப் பேரவை வேட்பாளர்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஏப். 22
வல்வெட்டித்துறை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.
தமிழ்த்தேசியக் கட்சியின் வல்வை இணைப்பாளர் வி. கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா, பொதுச் செயலாளரும் வல்வை நகரசபையின் முதன்மை வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், சமூகஅரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ், யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. பொன்குணரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் சைக்கிள் சின்னத்தில் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டுவந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இப்போது தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், தமிழ்த்தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகியனவற்றையும் இணைத்துத் தமிழ்த்தேசியப் பேரவை என்னும் கூட்டணியாகக் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

# உப்பு, புளி விலை சடுதியாக உயர்வு

யாழ்.குடா நாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் கிலோ 180 ரூபாவாக விற்கப்பட்ட உப்பு பைக்கற் ஒன்றின் விலை தற்போது 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேவேளை கிலோ ஆயிரத்து 200 ரூபாவாக விற்கப்பட்ட புளி தற்போது ஆயிரத்து 400 ரூபாவாக அதிகரித்துள்ளது.
இந்த விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (எ-25,17)



# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025






## அதிர்ஷ்ட காற்று வீசும்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு,

ஏட்டறிவைவிடப் பட்டறிவு அதிகமுடைய நீங்கள், எளியவர்களுக்கு நேசக்கரம் நீட்டுபவர்கள். உங்கள் ராசிக்கு 12ஆம் ராசியில் விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் காசு, பணம் விரயம், வீண் அலைச்சல் என்ற நிலை உண்டானாலும் அதை சுப விரயமாக மாற்றிக்கொள்வீர்கள். ஆரோக்கியம் திருப்தி தரும். மே 14ஆம் திகதி முதல் அஷ்டமத்து குருவின் காலம் தொடங்குகிறது. கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போகவும்.
வீண் வாக்குவாதம், சந்தேகம் வேண்டாம். படிப்பு மற்றும் வேலை சம்பந்தமாக பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பீர்கள். மகளுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். திருமணத்தையும் சிறப்பாக நடத்திக்காட்டுவீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்புக் கூடும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். சொந்த ஊரில் வீடு கட்டுவீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினையை உடன் பிறந்தவர்களுடன் சேர்ந்து பேசி, முதலில் முடிக்கவும், விட்டுக்கொடுப்பதால் நன்மைதான். சகோதரர்களுடன் இணக்கமாகச் செயற்படவும்.
சில பிரச்சினைகளுக்கு முடிவு தெரியாமல் தவித்த நிலை மாறி, இனி அதன் ஆணிவேரைக் கண்டறிந்து களையெடுப்பீர்கள். அம்மாவின் ஆரோக்கியம் பாதிக்கும். வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தம்பி, தங்கைகளால் அலைச்சல் இருக்கும். சிலர் வீடு மாறவேண்டிய சூழல் உருவாகும்.
மதிப்பு, மரியாதை கூடும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கணவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை முறையாக செய்துமுடிப்பீர்கள். வீட்டில் சிறுகச் சிறுக சேமித்த பணத்தைக் கொண்டு தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். மாமியார், மாமனார் உங்களின் திறமையை புரிந்துக்கொண்டு பெருமையாகப் பேசுவார்கள். கன்னிப் பெண்களுக்கு கல்யாணப் பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும்.
இலாபம் அதிகரிக்கும். அதற்காக அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைப் போடவேண்டாம். கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை ஏற்படும். பழைய சரக்குகளை புது யுக்தியால் விற்றுத் தீர்ப்பீர்கள். வேலையாட்கள் இனி உங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தருவார்கள். வாடிக்கையாளர்களின் தேவையறிந்து வியாபாரம் செய்வது இலாபத்தை இரட்டிப்பாக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு. சில அதிகாரிகளே ஆச்சரியப்படும்படி கடினமான வேலைகளையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். கேட்ட இடத்துக்கே மாற்றம் கிடைக்கும். சம்பளம் அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் குடும்ப விஷயங்களைப் பற்றி விவாதிக்கவேண்டாம். மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளவேண்டாம். சென்ற முறை முக்கிய ஆவணத்தை தொலைத்துவிட்டு தேடியதுபோல், இனி தேடிக்கொண்டிருக்காதீர்கள். எதிலும் கவனத்துடன் இருப்பது நல்லது.
கணினித் துறையினருக்கு வெளிநாட்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணி கிடைக்கும். அதிகம் கண் விழிப்பதையும், அர்த்த ராத்திரியில் உணவு உண்பதையும் தவிர்க்கப்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.ஐ. மூலம் பிறந்த முதல் குழந்தை

## மருத்துவத்துறையில் புதிய சாதனை

வொஷிங்டன், ஏப். 20

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் உலகின் முதற் குழந்தை மெக்சிக்கோவில் பிறந்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

மெக்சிக்கோ நாட்டிலுள்ள செயற்கைக் கருத்தரிப்பு மையமொன்றில், ஏ.ஐ. மற்றும் ரோபோ உதவியுடன் விந்தணுவைக் கருமுட்டையினுள் ஊசியின் மூலம் செலுத்தி வெற்றிகரமாக கருவுறச்செய்து, அந்தக் கருவுற்ற முட்டையை ஒரு 40 வயதான பெண்மணி ஒருவரின் கருப்பையினுள் பொருத்தி, குழந்தையை வளரச்செய்து கடந்த மார்ச் மாதம் ஆரோக்கியமாக ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

ஏ.ஐ. தொழில்நுட்பத்தால் கருத்தரிக்க இயலாத தம்பதிகளுக்குக் குழந்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மிக மிக அதிகமான சாத்தி யக்கூறுகளாக இருக்கிறது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏ.ஐ. உதவியுடன் பிறந்த உலகின் முதற் குழந்தை ஆரோக்கியமாக பிறந்துள் ளமையானது மருத்துவ உலகில் பெரும் திரும்புமுனையாக அமையும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ச-இ)


### பெயர் மாற்றம்

ஏழாலை மேற்கு ஏழாலையில் வசிக்கும் வேலுப்பிள்ளை செல்வராணி ஆகிய நான் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் வேலுப்பிள்ளை செல்வரத்தினம் என உள்ளது. அதனை வேலுப்பிள்ளை செல்வராணி என மாற்றம் செய்கின்றேன்.

வேலுப்பிள்ளை செல்வராணி

### பெறுகை அறிவித்தல் திருத்தம்
### வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல் - 2025 / 2026

21.04.2025 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பெறுகை ஆவணங்களை ஏற்றுக் கொள்ளும் காலம் 09.05.2025 ஆம் திகதி மு.ப 10.30 வரை என திருத்தம் செய்யப்படுகின்றது.

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு. 22.04.2025
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

### கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கப்பணியாளர்
செல்வி க.பிரகாஜினி அவர்களின்
அன்புத் தந்தையார்

**முருகன் கந்தசாமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**

### காணி விற்பனைக்கு

மிருசுவில் மற்றும் அல்லாரை தெற்கில் மிருசுவில் A9 வீதிக்கு அருகாமையில் 5பரப்பும் கச்சாய் வீதி அல்லாரை தெற்கில் 2.5 பரப்பும் காணிகள் விற்பனைக்கு உண்டு.வாங்க ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(CR/0068) S-1

whatsapp/ Viber 0033 770 012099

### கேள்வி அறிவித்தல் - 2025
### யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் கடைகளுக்கான

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 22.04.2025 தொடக்கம் 09.05.2025 வரை யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சமாசத்தின் கீழ் காணப்படும் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

- கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 23.04.2025 – 08.05.2025
- கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 09.05.2025 பி.ப 1.45 மணி வரை
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 09.05.2025 பி.ப 2.00 மணி
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :- கிராமிய வங்கிகளின் சமாச அலுவலகம்

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு "தலைவர்,பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல 95, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அதற்காக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னதாக இடப்படல் வேண்டும்.

- மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். தேசிய அடையாள அட்டை, அதன் பிரதி, மற்றும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளிக்க வேண்டும்.
- ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது. என்பதுடன் கேள்விக்தாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
- கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ இயக்குனர் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் சித்தி பெற்ற கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் 01.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சமாசத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.
- கேள்விதாரர் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.
- கேள்வி சித்தி பெறாத கேள்விதாரர்களின் கேள்வி வைப்புபணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
- மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
- வருடாந்தம் வாடகையானது 5% அதிகரிப்புக்கு உட்படுத்தப்படும்.

**மூன்று ஆண்டுகளுக்கான கடை வாடகை அட்டவணை**

| தொ.இல | விபரம் | முற்பணம்- நிலையானது | ஆகக்குறைந்த கேள்வித்தொகை – மாத வாடகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல - 01 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |
| 02 | கடை இல - 02 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |
| 03 | கடை இல - 03 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |
| 04 | கடை இல - 04 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |

தலைவர்,
யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,
95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
0212222639

### 27ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 07 . 1947



மறைவு 21 . 04 . 1998

**அமரர் கதிரவேலு கந்தையா**
(இரத்தினம் மெக்கானிக்)
திதி:06.05.2002

அறிவு வழிகாட்டி எம்மை அன்புடனே
அவனியிலே உயரவைத்தீர்!
அன்புவழிகாட்டி எம்மை ஆதரித்து
அரவணைத்து வளர்த்தெடுத்தீர்
பண்பு வழியதனில் நீங்கள் என்றும்
பாங்குடனே நடந்தீர்கள்! வன்புவழி எதுவென்று
வாழ்வினிலே அறிந்திடா அன்புருவே!
அப்பாவே ஆருயிர்த் தெய்வமே!

குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 14 . 04 . 1953



விண்ணில் 23 . 03 . 2025

**அமரர் திருமதி லோகினி குலேந்திரன்**
(இளைப்பாறிய ஆசிரியை)

ஆறாத்துயர் தந்து
மீளாத்துயில் கொண்டீர்
யார்தான் மறந்திருப்பார்
மனங்கவரும் புன்சிரிப்பை
கூடிக் குலவும் நேரம் எம்மை
குலுங்கிக் குலுங்கி சிரிக்க வைக்கும்
உம் குறும்பு காண்பதெப்போ
மற்றவர் துயர்கண்டு
மனந்துடித்துக் கதை சொல்வாய்
எங்களது துயர் அகற்ற
ஏன் தான் நீ வரவில்லை.
ஒருமுறை நீ வாராயோ?
ஒரு கதைதான் சொல்வாயோ?
அழுவதை நாம் நிறுத்திடலாம்.
புலம்புவதை மறத்திடலாம்
ஆனால்,
அமைதியான நேரமதில் - உன்
நினைவு வந்து வாட்டுதம்மா...
நொந்து நொந்து நாம் சாக
சொல்லாமல் கொள்ளாமல் -உன்
துணை தேடிச் சென்றாய் நீ
என்றே நாம் அமைதி கொள்வோம்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி ! சாந்தி11 சாந்தி.!!!

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உயிர்த்த ஞாயிறு திருப்பலி ஆராதனை

கிளிநொச்சி, ஏப்.22
உயிர்த்த ஞாயிறு நள்ளிரவுத் திருப்பலி ஆராதனை கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் அருட்தந்தை சில்வேஸ்ரர் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. (எ-41-316)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.22
சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தத் தொடரில், பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனின் "வெள்ளை யானை சாபந் தீர்த்த படலம்" எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.
சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# சுதேச வைத்தியத்தைக் காக்க அரசின் நடவடிக்கை அவசியம்

## வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.22**
**இலங்கைக்கான சுதேச வைத்தியம் அழிந்துபோகும் நிலைமை உருவாகியுள்ளது. அதை மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அனைத்து இலங்கை வருங்கால சுதேச வைத்திய அதிகாரிகள் சேவை சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஆயுர்வேத, சித்த, யுனானி என்றவாறு இலங்கையில் சுதேச வைத்தியம் இருக்கின்றது. இந்தக் கற்கைநெறியை நிறைவு செய்து ஆயிரத்து 700 பட்டதாரிகள் வேலைக்காகக் காத்திருக்கின்றனர். இவர்களைவிட 600 பேர் இறுதிப் பயிற்சிநிலையில் இருக்கின்றனர்.
மக்களுக்காகச் சேவையாற்ற நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது. கிராமங்கள்தோறும் சமூகநல வைத்திய அதிகாரிகளாக எம்மைக்கூடப் பயன்படுத்தமுடியும். நாட்டில் இருக்கும் வளங்களைக் கொண்டே மருந்துகளை உற்பத்தி செய்யமுடியும். ஆனால் அரசாங்கம் அதைச் செய்வதில்லை. இந்தநிலைமையை மாற்றியமைக்கத் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-125)



# பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22
அகில இலங்கைசைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2025ஆம் ஆண்டிற்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.
இந்தப் பரீட்சைகள் யாழ்ப்பாணம்வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.
பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் மே மாதம் முதல் வாரத்தில் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-41-66)

# அபிவிருத்திகள் எவையுமின்றி கோரக்கண்கட்டுக் கிராமம்!

## கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டு

கண்டாவளை, ஏப்.22
கோரக்கண்கட்டுக் கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டபோதும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்து என்பது தெரியாதுள்ளது.
இவ்வாறு கோரக்கண்கட்டுக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். பழைய ஊரியான கிராமத்தில் நேற்று தேசிய மக்கள் சக்தி நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுவரை கிராமத்தின் எந்த வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. கிராமத்தின் அனைத்து வீதிகளும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன. மழைக்காலங்களில் பாடசாலை மாணவர்கள் முதல் முதியவர்கள், கர்ப்பிணிகள் எனப் பலரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-25,55)

# திம்பிலியில் அறநெறிப் பாடசாலை

முல்லைத்தீவு, ஏப். 22
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திம்பிலிப் பகுதியில் 'கருமாரி' அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் உட்பட கிராம மட்ட பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (எ-25, 246)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.22
நல்லூர், வடக்குச் சட்டநாதர் வீதி, கொன்றையடித் திருவருள்மிகு வைரவப்பெருமான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை சாந்தி பூஜையுடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. 10 தினங்கள் நடைபெறவுள்ள அலங்கார உற்சவத்தில் காலை 9 மணிக்கும், மாலை 7 மணிக்கும் பூஜைகள் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற எரியூட்டலுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை

கழிவுகளை எரியூட்டுவது தொடர்பில் எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் திண்மக் கழிவுகள் சேகரிப்பு மையத்திலும், மீள் சுழற்சி மையத்திலும் உள்ள கழிவுகள் தீமூட்டி எரிக்கப்படுகின்றன என்று கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் உதயனில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியொருவர் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார். இதன் போதே, கழிவுகளை எதிர்காலத்தில் எரியூட்டினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் காற்றுமாசு தொடர்பில் நாம் கணிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றோம். நுண்ணுணரிகள் இந்த வேலைத் திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறிருக்கையில் எரியூட்டல் செயற்பாடுகள் மூலம் காற்றுமாசு மேலும் அதிகரிக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. எனவே, இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம125)

# ஒளிப்படக் காட்சியும் சுவடியாக்க வெளியீடும்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட முக மண்டபத்தில் நுண்கலை துறைசார் இரு நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.

இதன்படி, 'கே.கே.எஸ் வீதி அன்றும் இன்றும் வண்ணார்பண்ணை அத்தியாயம்' எனும் தலைப்பில் ஒளிப்படக் காட்சி ஒன்று மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் 'வேர்களை விற்றல்' என்னும் அரும் பொருள்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பற்றிய ஓர் சுவடியாக்கத் தொகுப்பும் இன்று வெளியிடப்படவுள்ளது.

அதேசமயம் நுண்கலைத் துறையில் பயிலும் இறுதிவருட மாணவர்களின் 'மரபுரிமை மாறும் தளம்' என்னும் காண்பியக் காட்சியும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் காண்பியப் படைப்பாளிகளின் தெரிவுசெய்யப்பட்ட படைப்புகளைக் காட்சிப்படுத்தவுள்ளனர். இந்தக் காட்சி மரபுரிமை சார் இடங்கள், பொருட்கள், பயிற்சிகள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மாற்றங்கள் பற்றியதாக அமையவுள்ளது. (ம-25)

# வாள்வெட்டில் முடிந்த வாய்த்தர்க்கம் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.22

வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இருவருக்கு இடையே நடந்த உரையாடல் வாக்குவாதமாக மாறி வாள்வெட்டில் முடிந்துள்ளது என்று கூறப்படுகின்றது. உடுத்துறையைச் சேர்ந்த ஒருவரின் வீட்டுக்கு, ஆழியவளையைச் சேர்ந்த ஒருவர் சென்றுள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையிலான உரையாடல் தர்க்கமாக மாறிக் கைகலப்பாகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆழியவளையைச் சேர்ந்த நபர், மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஏ-25,27)

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 08 . 1956 — மறைவு 20 . 04 . 2025

### முருகன் கந்தசாமி (செல்வம்)

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ் பல்கலைக்கழகம்)

அளவெட்டி சாந்தானோடையைப் பிறப்பிடமாகவும் கணேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன்-சௌந்தரி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.கே.வி நடராஜா தம்பதியின் அன்பு மருமகனும் தயாபரி அவர்களின் பாசமிகு கணவரும் பிரகலாதன், பிரதீபனா, பிரகாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பசுபதி, செல்லம்மா மற்றும் தங்கம்மா, பொன்னம்மா, ஜெயரஞ்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கணேஸ்வரம், அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

## நீங்கா நினைவில்

2 ஆம் ஆண்டு நினைவலைகள் — 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



திரு. கனகசபை சண்முகலிங்கம்

தோற்றம் 28.09.1936 — மறைவு 03.04.2023



திருமதி மகேஸ்வரிப்பிள்ளை சண்முகலிங்கம்

தோற்றம் 18.06.1938 — மறைவு 03.05.2024

எங்களை விட்டுப் பிரிந்த அன்புத்தெய்வங்களே!
அப்பா நீங்கள் பிரிந்து ஓராண்டிலே. அம்மாவையும் அழைத்து ஏனோ?
அம்மாவின் ஏக்கமும் தவிப்பும் உங்களுக்குப்புரிந்ததுவோ!
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும். எங்கள் உள்ளத்தில் நீங்கள்
இருவரும். வாழ்வீர்கள். நீங்கள் இல்லாத வீடு வெறிச்சோடி விட்டதே
அம்மா. ஓம்சாந்தி!!! சாந்தி!! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 07 . 1955 — மறைவு 21 . 04 . 2025

### மார்க்கண்டு கெங்காதரன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கெங்காதரன் அவர்கள் நேற்று (21.04.2025) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- மாணிக்கபிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும் ரோகினியின் அன்புக் கணவரும் விஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேசசெயலகம்.காரைநகர்), விஜயரூபன் (லண்டன்). வினோஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -பிரதேசசெயலகம்.காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி. மகேந்திரம் மற்றும் குணரதி. யோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நந்தகுமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்). ஜனனி (இலண்டன்). துவாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருஷா. அஜேஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்). ஹாஷா, ஜெமிஷா, அனிஷா, விதுனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அடைக்கலம் தோட்டம் வீதி, சீ(?)ாவடி, வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர். 021 225 0987

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மைத்திரிக்கு...

நீண்டநேரம் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதியைத் தவறாகக் கையாண்டார், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நன்மைகருதி நிதியை வழங்கினார் உள்ளிட்ட மோசடிக் குற்றச்சாட்டுகள் மைத்திரி மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்காகவே அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
இதே விடயங்களுக்காக சில நாள்களுக்கு முன்னரும் மைத்திரிக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ம-இ)

## மூளைக்காய்ச்சல்...

வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த, கவிந்தன் சாமினி (வயது 22) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காய்ச்சல் காரணமாக, கடந்த 14ஆம் திகதி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்றுக் காலை உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
(அ-ம-26-27-100)

## சோதனைச்...

அநுரகுமார திஸாநாயக்க கடந்த ஜனவரி மாதம் வடக்குக்கு வந்து திரும்பியபோது, அந்தச் சோதனைச் சாவடிகளை அகற்றும் உத்தரவைப் பிறப்பித்திருந்தார். அதையடுத்து அவை அகற்றப்பட்டிருந்தன. எனினும், பின்னர் அந்த சோதனைச் சாவடிகள் மீண்டும் போடப்பட்டன. இவ்வாறான நிலையிலேயே, தற்போது யாழ்ப்பாணத்துக்கு அநுர மீண்டும் வந்து சென்றுள்ள நிலையில் அந்தச் சோதனைச் சாவடிகள் நேற்றுமுன்தினம் முதல் மீளவும் அகற்றப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. (அ-ம-சி)

## வொஷிங்டனில்...

அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டிருந்த பரஸ்பர வரிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன. எனினும், 90 நாள்களுக்குப் பின்னர் அந்த வரிகள் மீளவும் நடைமுறையாகுவதற்குக் கூடுதலான சாத்தியங்கள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.
இந்த விடயம் தொடர்பில் கையாள்வதற்காக இலங்கையால் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு தற்போது அமெரிக்காவுக்குச் சென்றுள்ள நிலையிலேயே, அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜெமிசன் கிரீருடன் இன்று பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-சி)

## பொலிஸார்...

பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.
'வேரிலிருந்து விழுது வரை' என்ற தொனிப்பொருளில் இந்த நடைபவனி நடைபெற்றது. அந்த நடைபவனியில், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்துகொள்கின்றனர் என்று கிடைத்த தகவலுக்கு அமையவே பொலிஸார் குவிக்கப்பட்டனர்.
இதையடுத்து, கலைப்பீட பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது பேரணியல்ல மாறாக நடைபவனியே என்ற விடயம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. எனினும், பொலிஸாரின் தொடர்ச்சியான அறிவுறுத்தலுக்கு அமைய, வேட்பாளர்களை அனுமதிப்பதில்லை என்ற இணக்கப்பாட்டுடன் நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.
பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம் முன்பாக ஆரம்பித்த நடைபவனி, பிரதான நுழைவாயில் ஊடாகச் சென்று பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலுடாக மீண்டும் கலைப்பீடத்தை வந்தடைந்தது.
நடைபவனியில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பழைய மாணவர்சங்க நிர்வாகிகள், பல்கலைக்கழக பழைய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-125-26)

## வேட்புமனுக்கள்..

டுள்ளன.
யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, பருத்தித்துறை பிரதேசசபை, சாவகச்சேரி பிரதேசசபை, நல்லூர் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட தரப்புகளும் இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்திருந்தன.
இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று இடம்பெற்றபோதே, போதிய அவகாசம் இல்லாதமையைக் காரணமாகக் கூறி அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. (அ-ம-26)

## நுழைவாயிலருகே...

வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே, அந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 25 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.
சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. விசாரணைகளைத் தொடர்ந்து அவர் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-ம-26)

## இராணுவப்...

புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். பேராயர் மேலும் தெரிவித்ததாவது:-
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் சில சிறப்பு விசாரணைகளையும், விசேட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதன்படி,
நாடாளுமன்ற நூலகத்தில் மட்டும் தற்போது வைக்கப்பட்டுள்ள உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மக்கள் பார்வைக்கு அதனைப் பகிரங்கப்படுத்தவேண்டும்.
அத்துடன், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்காணிப்பதற்கும், வழக்குகளை தொடுப்பதற்காகவும் முழுமையான அதிகாரம் உடைய அலுவலகமொன்று அமைக்கப்படவேண்டும்.
உயிர்த்தஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் கண்டு, உண்மையை மக்களுக்கு பகிரங்கப்படுத்தி, உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு காரணமானவர்கள், யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.
2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள அனைத்துப் பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படவேண்டும்.
பயங்கரவாதக் குழுவின் தலைவர் ஸஹ்ரானுக்கும், இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் அது தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சியில் வெளியான தகவல்கள் சம்பந்தமாக முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும்.
இவ்வாறான கோரிக்கைகளிலும், நிலைப்பாட்டிலும் நாங்கள் இருப்பதால், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட இமாம் குழுவின் விசாரணை அறிக்கையை ஏற்கமுடியாது-என்றார். (அ-ம-44)

## யாழ்ப்பாணம்,...

இரண்டு மாவட்டங்களிலுமாகச் சேர்த்து அண்ணளவாக 80 தொடக்கம் 100 ஏக்கர் வரையான காணிகளே புதிதாக விடுவிக்கப்பட வுள்ளன. அத்துடன், முன்னதாக விடுவிக்கப்பட்டும், இன்னமும் மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்படாமல் உள்ள காணிகளை 'முற்றாணையாக' விடுவிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, காணிகள் விடுவிக்கப்பட்டு அவற்றுக்கான பாதைகள் விடுவிக்கப்படாமல் இருந்தசர்ச்சைக்குரியவிடயங்களுக்கும் தீர்வு எட்டப்படும் என்றும் தெரியவருகின்றது.
யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, பருத்தித்துறை மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளை மையப்படுத்தியே பிரதான விடுவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
புதிய விடுவிப்புகள் மற்றும் முற்றாணையான விடுவிப்புகள் என அண்ணளவாக 300 ஏக்கர் காணிகள் தொடர்பில் பரிசீலனைகள் இடம்பெறுவதாகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது.
இது தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரத்தைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-
மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதில் உறுதியுடன் உள்ளோம். படிப்படியாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பலாலி விமான நிலையத்துடன் தொடர்புடைய காணிகளைத் தவிர, ஏனைய காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும்-என்றார்.
(அ-ம-125-26)

## பாப்பரசர்...

நிமோனியாத் தொற்றால் பாப்பரசர் பிரான்ஸிஸ் அவதிப்பட்டு வந்தார். சிகிச்சைக்குப் பின்னர், சில நாள்களுக்கு முன்னர் வத்திக்கானுக்குத் திரும்பிய போதிலும், அவருடைய உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாகவே இருந்தது. இந்த நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 7.35 மணியளவில் பாப்பரசர் பிரான்ஸிஸ் காலமானார்.
உயிர்த்தஞாயிறுதின வழிபாடுகளுக்கு இம்முறை பாப்பரசர் பிரான்ஸிஸ் தலைமையேற்றவில்லை. எனினும், உயிரிழப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாக, வத்திக்கானின் மேலரங்கில் இருந்தவாறு பொதுமக்களுக்கு உயிர்த்தஞாயிறுதின வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில், அவரின் உயிரிழப்பு உலகக் கத்தோலிக்கர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் 266ஆவது பாப்பரசராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 12 வருடகால தனது தலைமைத்துவத்தில், கத்தோலிக்க திருச்சபையில் பல சீர்திருத்தங்களை அவர் மேற்கொண்டார்.
திருச்சபையின் பாதிரியார்களால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துன்புறுத்தல்களுக்காக அவர் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரியிருந்தார். அத்துடன், வத்திக்கானில் உள்ள ஆடம்பர மாளிகையும், மாதாந்த ஊதியத்தையும் அவர் நிராகரித்திருந்தார். இதனால், பழமைவாதிகளின் விமர்சனத்தையும் எதிர்கொண்டார்.
பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ், ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்தவர். பாப்பரசர் பதவியில் அமர்ந்த முதலாவது லத்தீன் அமெரிக்கர் என்ற பெருமையையும் அவர் பெற்றிருந்தார். (அ-ம-இ)

## கடவுச்சீட்டு...

வருகின்றன.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஜனவரி மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் அமைக்கப்படும் என்ற அறிவித்தலை விடுத்திருந்தார். இதன்போது, கடவுச்சீட்டு அலுவலகத்துக்காக மாவட்டச் செயலகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தையும் அவர் பார்வையிட்டிருந்தார்.
இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே, கடவுச்சீட்டு அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.
கடவுச்சீட்டு அலுவகத்தில், 'ஒருநாள் சேவைக்கான வலைத்தள சேவைக்கு' கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதிலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து, தென்னிலங்கையில் இருந்து குறித்த சேவை வழங்குநர்கள் பெறப்படவுள்ளனர்.
இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்ட குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் கடமையாற்றத் தேவையான தமிழ் உத்தியோகத்தர்களை அரச திணைக்களங்களில் இருந்து தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் இருந்து வருகைதந்த விசேட குழுவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## எரிவாயு...

பற்றியுள்ளது. பலத்த காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றைத்திரிபுபடுத்துதலே அரசாங்கத்தின் மாற்றமா?



## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேள்வி

**யாழ்ப்பாணம்,ஏப். 22**

**தேர்தலுக்கு முன்னர் ஒரு கதையையும், தேர்தலுக்குப் பின்னர் வேறொரு கதையையும் கூறுவதுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மாற்றமா? அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதி போன்றோரின் நினைவுகளையே தடுப்பவர்கள் மாற்றம் என்ற ரீதியில் எல்லாச் சமூகங்களையும் இணைப்பார்களா?**

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் த.லஜிதர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவம் புரிந்த அடக்குமுறைக்கு எதிராக மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுநினைவுத்தூபியடியில் அனுஷ்டிக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மண்ணில் தற்போதுகூடச் சுதந்திரமான வகையில் நினைவேந்தலை மேற்கொள்ளமுடியாத நிலையே தொடர்கிறது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் 70 வருட அரசியல் இந்த மண்ணிலிருந்திருக்கிறது. அதில் 40 வருட அரசியல் ஜனநாயக ரீதியான அரசியலாகவும், 30 வருட அரசியல் யுத்தம் மிகுந்த அரசியலாகவும் இருந்திருக்கிறது. இந்த 70 வருட அரசியலை மாற்றம் என்ற மாயைச் சூழலுக்குள் புதைக்க முற்படுகின்றது இந்த அரசாங்கம்.

நாங்கள் எந்தவொரு காலகட்டத்திலும் மண்ணுக்காக உயிர்நீத்த மாவீரர்களையோ அல்லது நாட்டுப் பற்றாளர்களையோ விட்டுக்கொடுக்கக்கூடாது. தமிழர் தாயகத்தின் விடிவுக்காக நிறைய உயிர்கள் தங்கள் உயிர்களை இந்த மண்ணில் இரத்தம் சிந்தித் தியாகம்செய்திருக்கின்றன. தற்போதுள்ள தலைமுறை கடந்தகால வரலாறுகளை நினைத்துப் பார்ப்பதில்லை - என்றார். (ச-66)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை (உணவு பரிமாறுபவர்கள், தேநீர் தயாரிப்பவர்கள், ரொட்டி தயாரிப்பவர்கள், பொதி செய்பவர்கள்)

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 070 193 0545

**அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ் பல்கலையிலிருந்து 300m தூரத்தில் இராமநாதன் வீதியில் அமைதியான சூழலில் கல்வி கற்கும்/வேலைக்கு செல்லும் பெண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு- 077 208 7778

# நிதி விடுவிப்பினைக் காட்டி அடிபணியவைக்கிறது அரசு

## *தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முதல்வர் வேட்பாளர் தெரிவிப்பு*

நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்ய வும் அடக்குமுறை செய்யவும் அநுர தலைமையிலான தேசிய மக்கள் முனைகின்றது. இவர்களது மிரட்டல் அதிகார இலஞ்சத்தை எவரும் ஏற்காது தேசிய மக்கள் சக்தியை தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து மக்கள் தூக்கிஎறிவது அவசியமாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகரசபை முதல்வர் வேட்பாளர் வை. கிருபா கரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில், தனது கட்சியிடம் அதிகாரம் கிடைக்கும் பட்சத்திலே உள்ளூர் அதிகாரசபைகளுக்கு நிதியொதுக்கப்படும் என்ற தொனிப் பொருளில் வடக்கின் தேர்தல் பரப்புரை மேடைகளில் கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி அநுரகுமார. ஜனாதிபதியின் கருத்து ஒரு மக்கள் கூட்டத்தின் ஜனநாயகத்தைக் கேள்விக் குறியாக்கு கின்றது.

அந்தவகையில் தமிழரையும் தமிழர் இருப்பையும் இல்லாதொழிக்கமுனையும் தேசிய மக்கள் சக்தியை தமிழ் அரசியல் பரப்பில் காலூன்றவிடாது அனைவரும் ஒருமித்து எதிர்கொள்வது அவசியம்-என்றார். (ச-27,125)

## *தலதா...*

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தியினரின் தலைமையில், ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை சிறந்த நடவடிக்கை. அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகின்றோம். ஆனால், இது வெறும் முதற்கட்ட நடவடிக்கையே.

பிரதான விடயம் என்னவென்றால், 1989ஆம் ஆண்டு, தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்காக ஜே.வி.பி.யினர் மன்னிப்புக் கோரவேண்டும். அவ்வாறு செயற்படும் பட்சத்தில், பெருமளவான மக்கள் ஜே.வி.பி.யினரைப் பாராட்டுவார்கள். சீனாவுக்கு அடுத்தபடியாக பலம்பொருந்திய அரசாங்கம் எமது நாட்டில்தான் உள்ளதுபோலும். ட்ரம்புக்கு கடிதம் எழுதியவுடன் 90 நாள்கள் வரி விதிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாம்-என்றார். (அ-ம-44)

**வேலையாட்கள் தேவை**

நியூ சன் செரமிக் பிறைவெட் லிமிடெட் எனும் வியாபார நிலையத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வெற்றிடங்களுக்கு பணியாட்கள் தேவைப்படுகின்றது.

- கணக்காளர்-பெண்
- விற்பனையாளர்-ஆண்/பெண்
- உதவியாளர்-ஆண்

கிளிநொச்சிற்கு அருகாமையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மற்றும் மேலதிக விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நியூ சன் செரமிக் பிறைவெட் லிமிடெட்,**
**A9 வீதி, பழைய வைத்தியசாலை முன்பாக,**
**கிளிநொச்சி.**

தொடர்பு: 071 792 3721 / 021 228 3872

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 07 . 07 . 1967



விண்ணில் 29 . 04 . 2023

**அருளானந்தம் ஆனந்தகுமார்**

அழுவதை விட்டாலும், உள்ளத்தில்
நினைவுகள் ஆட்கொள்கின்றன
உங்கள் புன்னகை ஒளியும்,
வார்த்தைகளின் எதிரொலியும்
இன்றும் உயிர்க்கின்றன
கூட்டத்திலும் தனிமையாய்,
விடியும்வரை நினைவுகள்
சூழ்கின்றன நீங்கள் பதித்த
வாழ்க்கையை நிறைவாக்க
முயல்கிறோம் நீங்கள் விதைத்த
நம்பிக்கைகளை நெஞ்சில்
வளர்க்கிறோம் உங்களை எண்ணி
கண்ணீரில்லா புன்னகை பூக்கிறது
உயிர் பிரிந்தாலும் உள்ளம்
பிரியவில்லை உறவு என்றென்றும் தொடர்கிறது

**டச்சு வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.** (CS/58010) J-1

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org